தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
பாடத்திட்டம்
தமிழ்மொழி மற்றும் இலக்கியம்
(முதுநிலைப் பட்டப்படிப்புத்தரம்)

குறியீடு: 598

அலகு I: (20 வினாக்கள்)

மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் - பேச்சு வழக்கு எழுத்து வழக்கு ஆகிய மொழியின் இருவகை நிலை - காலந்தோறும் எழுத்து வளர்ச்சி - மொழிக்குடும்பம் - திராவிட மொழிகள் - திருந்திய மொழிகள், திருந்தா மொழிகள், கிளைமொழிகள், தமிழில் பிறமொழிக் கலப்பு - வடமொழி, ஆங்கிலம் மற்றும் பிறமொழிகளில் தமிழின் செல்வாக்கு – தமிழின் செம்மொழிப்பண்புகள்.

அலகு II: (20 வினாக்கள்)

தமிழ் எழுத்துக்களும் வகைகளும் - முதல் எழுத்து, சார்பெழுத்து, உயிரெழுத்து, மெய்யெழுத்து அவற்றின் வகைகள் - ஒலியன் - சொல்லும் சொல்லின் வகைகளும் - பெயர், வினை, இடை, உரி. உருபன் - வேற்றுமை, வேற்றுமை உருபுகள். வினை, வினை வகைகள். மூவிடம், பால்காட்டும் விகுதிகள், புணர்ச்சி விதிகள்.

அலகு III: (20 வினாக்கள்)

பொருளிலக்கணம் - அகப்பொருள், புறப்பொருள் - திணையும் துறையும் - அகத்திணை 7 - புறத்திணை 7 - இருவகை கைகோள் - களவு, கற்பு - முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் - இரவுக்குறி, பகற்குறி உடன்போக்கு, அறத்தொடு நிற்றல், வெறியாட்டு – போர்மறம், விழுப்புண்படல் - புறமுதுகிடாமை - கொடை விருந்தோம்பல் - புரவலர், புலவர் உறவு.

அலகு IV: (20 வினாக்கள்)

யாப்பு - பா வடிவங்கள் - ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா, பாவினங்கள் - புதுக்கவிதைப் போக்கு - அணிநலன் - உவமை அணி, உருவக அணி, வஞ்சப்புகழ்ச்சி அணி, தற்குறிப்பேற்ற அணி, சொற்பொருள் பின்வருநிலை அணி - பொருள்கோள் வகைகள்.

அலகு V: (20 வினாக்கள்)

தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் – 41 - தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் களவியல் உரை.

அலகு VI: (20 வினாக்கள்)

இலக்கண நூல்கள் - நன்னூல் - யாப்பருங்கலக்காரிகை - நம்பியகப்பொருள் - புறப்பொருள் வெண்பாமாலை, முத்துவீரியம் – வீரசோழியம், நேமிநாதம், அறுவகை இலக்கணம், பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல்.

அலகு VII: (5 வினாக்கள்)

அற இலக்கியம் - ஔவையாரின் நூல்கள், குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம், பாரதியின் புதிய ஆத்திசூடி, பாரதிதாசனின் ஆத்திசூடி. சிவப்பிரகாசரின் நன்னெறி, அதிவீரராம பாண்டியனின் வெற்றிவேற்கை.

அலகு VIII: (5 வினாக்கள்)

காப்பிய இலக்கியம் – ஐம்பெருங்காப்பியம் – சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி. ஞ்சிறுங்காப்பியம் முழுவதும். கம்பராமாயணம், பெரியபுராணம், சீறாப்புராணம், தேம்பாவணி. தற்காலக் காப்பியங்கள் – பாஞ்சாலிசபதம், புரட்சிக்கவி, இராவண காவியம், கள்ளிக்காட்டு இதிகாசம்.

அலகு IX: (5 வினாக்கள்)

பக்தி இலக்கியமும் சிற்றிலக்கியமும் - பன்னிரு திருமுறை, நாலாயிர திவ்ய பிரபந்தம் - திருப்புகழ் - நந்திக் கலம்பகம், கலிங்கத்துப்பரணி - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - குற்றாலக் குறவஞ்சி - அழகர் கிள்ளைவிடு தூது - முக்கூடற்பள்ளு - திருவருட்பா – குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் - இரட்சணிய யாத்திரிகம்

அலகு X: (65 வினாக்கள்)

புதினம் (5 வினாக்கள்) - தோற்றம் வளர்ச்சி - மாயூரம் வேதநாயகம் பிள்ளை, நா.பார்த்தசாரதி, தி.ஜானகிராமன், சுந்தர ராமசாமி, பாலகுமாரன், ஆ.மாதவன், இராஜம் கிருஷ்ணன், இந்திரா பார்த்தசாரதி, அசோகமித்திரன், சோ.தர்மன், ஜெயமோகன், எஸ்.இராமகிருஷ்ணன், வண்ணநிலவன், நீலபத்மநாபன், பூமணி, நாஞ்சில் நாடன், பிரபஞ்சன், ஆதவன், சுஜாதா, தோப்பில் முகமதுமீரான், மேலாண்மை பொன்னுசாமி, வாஸந்தி, தமிழவன், சாரு நிவேதிதா, சுப்ரபாரதி மணியன், தமிழ்ச்செல்வி, ஜோ.டி.குரூஸ், பாமா, பெருமாள் முருகன் ஆகியோர்.

சிறுகதை (5 வினாக்கள்) - தோற்றம், வளர்ச்சி - வ.வே.சு. ஐயர், புதுமைப்பித்தன், கு.ப.ரா., மௌனி, ந.பிச்சமூர்த்தி, அகிலன், கி.ராஜநாராயணன், ராமாமிர்தம், நகுலன், ஜெயகாந்தன், பிரமிள், கோணங்கி, தமிழ்ச்செல்வன், பாவண்ணன், பிரேம்ரமேஷ், சா.கந்தசாமி, பிரபஞ்சன், மாலன், இந்திரா, பார்த்தசாரதி, கந்தர்வன், அம்பை, சூடாமணி, சிவகாமி, வெண்ணிலா, இமையம் ஆகியோர்.

மரபுக்கவிதை (10 வினாக்கள்) - பாரதியார், பாரதிதாசன், கவிமணி, நாமக்கல் கவிஞர், வாணிதாசன், தமிழ் ஒளி, கம்பதாசன், கண்ணதாசன், சுரதா. பெருஞ்சித்திரனார், முடியரசன் ஆகியோர்.

புதுக்கவிதை (5 வினாக்கள்) - மீரா, மேத்தா, அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், சிற்பி, வைரமுத்து, அறிவுமதி, கலாப்பிரியா, கனிமொழி, தமிழச்சி, புவியரசு, குட்டிரேவதி, மனுஷ்யபுத்திரன் ஆகியோர்.

நாடக இலக்கியம் (5 வினாக்கள்) - சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், இந்திரா பார்த்தசாரதி, இன்குலாப் ஆகியோர்.

உரையாசிரியர்களும் உரைநடை வளர்ச்சியும் (5 வினாக்கள்) - உரையாசிரியர்கள் உரைநடை - ஆறுமுக நாவலர் - உ.வே. சாமிநாத ஐயர் - வ.வே.சு. ஐயர் - மறைமலை அடிகள் – திரு.வி.க. - ரா.பி. சேதுப்பிள்ளை - எஸ்.வையாபுரிப் பிள்ளை, பண்டிதமணி மு.கதிரேசனார் - தெ.பொ.மீ, மு.வ, வ.சுப.மாணிக்கம், பெருஞ்சித்திரனார், பாவாணர், சாமி சிதம்பரனார், நா.வானமாமலை, தொ.மு.சி. இரகுநாதன், க.நா.சு.

மொழிபெயர்ப்பு இலக்கியம் (10 வினாக்கள்) - மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் - மலையாள தமிழ் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள், ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள்.

நாட்டுப்புற இலக்கியம் (5 வினாக்கள்) - நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள், நம்பிக்கைகள், பழமொழி, விடுகதை.

தமிழியல் ஆராய்ச்சி வரலாறும் அணுகுமுறைகளும் (10 வினாக்கள்) – சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை – நவீனத்துவம், அமைப்பியல், பெண்ணியம், தலித்தியம், ஒப்பிலக்கியம்.

தமிழும் பிற துறைகளும் (5 வினாக்கள்) - இதழியல் - தமிழ் மொழி வளர்ச்சிக்கு இதழ்களின் பங்களிப்பு – மணிக்கொடி, எழுத்து. ஆட்சித்தமிழ், அறிவியல் தமிழ், கணினித்தமிழ்.

நாள்: 07.10.2026